# 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம்–2003 (சட்டம் எண்.16/2003), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் 2003 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 6 (2) –ன் படி, நிதித்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், அரையாண்டிற்கு ஒரு முறை வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்டவாறு வருவாய் மற்றும் செலவினம் உள்ளதா என ஆய்வு செய்து, வரவினம் மற்றும் செலவினத்தில் உள்ள தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான குறியீடுகளை எய்துவதற்கு தீர்வு முறைகளைக் கண்டறிந்து, அந்த ஆய்வு முடிவுகளை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்பட வேண்டும்.

இச்சட்டத்தின் பிரிவு **6 (3)–**ன் படி ஆய்வின் முடிவை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கும் பொழுது, பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டும்:–

(அ) இச்சட்டத்தின்படி மாநில அரசுக்கு உள்ள பொறுப்புகளை (Obligations) நிறைவேற்றுவதில் காணப்படும் மாறுபாடுகள் (Deviations);

(ஆ) அத்தகைய மாறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா, மற்றும் அவை உள்ளபடியேயான அல்லது எய்தப்பட வேண்டிய வரவு–செலவுத் திட்ட இலக்குகளை ஒட்டி உள்ளனவா என்பன பற்றிய விவரங்கள்; மற்றும்

(இ) மாநில அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள தீர்வுகள் (Remedial measures)

இதன் அடிப்படையில், **2017–2018** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த ஏப்ரல் முதல் செப்டம்பர் **2017** வரையிலான ஆறுமாத காலத்திற்கான ஆய்வினை

2017 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகின்றது.

**<u>வருவாய் வரவுகள் பற்றிய ஆய்வு</u>:**

அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்

ஆ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்

இ) மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகை

ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்

மத்திய அரசின் உதவி மானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு உட்பட 2017–2018 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட

மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் 1,59,363 கோடி ரூபாயாகும். 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 67,204 கோடி ரூபாயாகும். இது 2017–2018 ஆம் ஆண்டிற்கு கணிக்கப்பட்ட மொத்த வருவாய் வரவுகளில் 42.17 சதவீதமாகும். இது 2016–2017 ஆம் ஆண்டில் அதே கால அளவில் பெறப்பட்ட வருவாய் வரவுகளைக் காட்டிலும் 3.76 சதவீதம் கூடுதலாகும். 2017–2018 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளோடு ஒப்பிட்டு, மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

# 2017–2018 ஆம் நிதியாண்டின் முதல் ஆறு மாத காலங்களில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் போக்கு

| வருவாய் வரவுகள் | 2016-2017 முதல் நிலைக் கணக்குகள் | 2017-2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2016 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2017 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2016-2017 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2017-2018 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2017-2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | **(ரூபாய் கோடியில்)** | | | | **%** | |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 85,942 | 99,590 | 41,279 | 43,445 | 5.25 | 43.62 |
| மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | 9,914 | 12,318 | 3,517 | 3,486 | - 0.88 | 28.30 |
| மத்திய வரிகளில் பங்கு | 24,538 | 27,224 | 9,865 | 11,661 | 18.21 | 42.83 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 19,838 | 20,231 | 10,108 | 8,612 | - 14.80 | 42.57 |
| **மொத்தம்** | **1,40,232** | **1,59,363** | **64,769** | **67,204** | **3.76** | **42.17** |

**<u>(அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்</u>:**

2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான முதல் ஆறு மாதங்களில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் **43,445** கோடி ரூபாயாகும். இது **2017–2018** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **43.62** சதவீதமாகும். இது முந்தைய ஆண்டின் அதாவது **2016–2017** ஆம் ஆண்டு அதே கால அளவில் பெறப்பட்ட வருவாயோடு ஒப்பிடும்போது **5.25** சதவீதம் உயர்ந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்தில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய்ப் போக்கின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாநில வரிகள் | 2016–2017 முதல் நிலைக் கணக்குகள் | 2017–2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2016 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2017 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2016–2017 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2017–2018 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2017–2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | **(ரூபாய் கோடியில்)** | | | | **%** | |
| வணிக வரிகள் | 66,193 | 77,234 | 31,194 | 33,455 | 7.25 | 43.32 |
| மாநில ஆயத் தீர்வைகள் | 6,248 | 6,903 | 3,061 | 2,765 | - 9.68 | 40.06 |
| முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணங்கள் | 7,237 | 8,220 | 4,374 | 4,324 | - 1.15 | 52.60 |
| வாகனங்கள் மீதான வரிகள் | 4,854 | 5,418 | 2,473 | 2,771 | 12.07 | 51.14 |
| ஏனையவை | 1,410 | 1,815 | 177 | 130 | - 26.55 | 7.16 |
| **மொத்தம்** | **85,942** | **99,590** | **41,279** | **43,445** | **5.25** | **43.62** |

2017 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. முந்தைய நிதியாண்டில் பெறப்பட்ட வரி வருவாயைக் காட்டிலும் 14 சதவீதம் வருவாய் வளர்ச்சியுடன் மாநில அரசின் வருவாயைக் காப்பதற்காக, மத்திய அரசு இழப்பீட்டுத் தொகை வழங்கி வருகிறது. பெட்ரோல் மற்றும் டீசல் மீதான விற்பனை வரி உயர்வு, வணிக வரியின் வளர்ச்சிக்கு உதவிய போதிலும், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள மதுபானக் கடைகளுக்கு உச்ச நீதிமன்றம் விதித்த தடை வணிக வரி வருவாயில் கணிசமான எதிர்மறைத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒட்டுமொத்த தாக்கத்தால், வணிக வரி வருவாய் முந்தைய ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் வளர்ச்சியினை அடைந்த போதிலும், வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்டதைவிட கணிசமான அளவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவுகளில்

அடைந்துள்ள வளர்ச்சி, வரவு செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்டதைவிடக் குறைந்துள்ளது.

முதல் ஆறு மாதங்களில் முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்களின் மூலமாகப் பெறப்பட்ட வருவாய் வரவுகள், சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது வருவாய் குறைந்து மாநிலத்தின் நிதிநிலையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளின் பத்திரப் பதிவு மீதான உயர் நீதிமன்றத் தடையாணை காரணமாக முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்களின் கீழ் வருவாய் வரவுகள் சென்ற ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டில் இதுவரை குறைந்து பெறப்பட்டுள்ளது. மாநில அரசின் வருவாயில் பாதிப்பு ஏற்படாத வகையில் பத்திரப் பதிவுகளை ஊக்குவிக்க, மாநில அரசு வழிகாட்டி மதிப்புகளை 33 சதவீதம் குறைத்ததுடன், முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்களையும் உயர்த்தியுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்ட, இந்தியாவில் உற்பத்தியாகும் அயல்நாட்டு மதுபானத்தின் மீதான மாநில ஆயத்தீர்வையையும், மதுபான உற்பத்தியாளர்களுக்கான அடிப்படை விலையையும் மாநில அரசு அதிகரித்து, வரி வருவாயை உயர்த்தியுள்ளது. மேலும், அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளின் பத்திரப் பதிவு தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் மாநில அரசு 2017–2018 ஆம் நிதியாண்டில் பெறப்படும் வருவாய்க்கும், வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள இடைவெளியினைக் குறைக்க இயலும்.

**(ஆ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்:**

2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான 12,318 கோடி ரூபாயில், 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய்

**3,486** கோடி ரூபாயாகும். இது, முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயைக் காட்டிலும் **0.88** சதவீதம் எதிர்மறை வளர்ச்சியையும், **2017–2018** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **28.30** சதவீதமாகவும் உள்ளது. வட்டி வருவாய் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், **2017–2018** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு:**

பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, தமிழகத்திற்கான மத்திய அரசின் பொது வகைப்படுத்தப்பட்ட பங்கு **4.969** சதவீதத்திலிருந்து **4.023** சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, மாநிலங்களுக்கான வரிகளின் பங்களிப்பில் **19.04** சதவீதம் குறைந்துள்ளது. **2016–2017** ஆம் ஆண்டு முதல் நிலைக் கணக்குகளின் படி, மத்திய வரிகளில்

மாநில அரசின் பங்காக 24,538 கோடி ரூபாய் பெறப்பட்டது. தமிழ்நாட்டிற்கான பங்கு குறைக்கப்படாமல் இருந்திருந்தால், 30,308 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கக் கூடும். அதாவது, பெற்றிருக்க வேண்டிய 30,308 கோடி ரூபாயைவிட, 5,770 கோடி ரூபாய் குறைந்து 24,538 கோடி ரூபாய் மட்டுமே தமிழ்நாடு பெற்றது. இது, பதினான்காவது நிதிக்குழுவினால் தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய இழப்பாகும்.

பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய வரிகளில் தமிழகத்திற்கான பங்காக மொத்தம் 27,224 கோடி ரூபாய் என்று மத்திய அரசு 2017–2018 ஆம் ஆண்டிற்கான தனது வரவு செலவுத் திட்டத்தில் நிர்ணயம் செய்துள்ளது. நடப்பு நிதியாண்டில், இந்தத் தொகை மத்திய அரசால் மாதாந்திரத் தவணையாக வழங்கப்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட

வரவுகள் **11,661** கோடி ரூபாயாகும். **2017** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வரவுகள் முந்தைய ஆண்டின் இதே காலத்தில் பெறப்பட்ட வரவினத்தைக் காட்டிலும் **18.21** சதவீதம் கூடுதலாகவும், **2017–2018** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் **42.83** சதவீதமாகவும் உள்ளது.

நடப்பு நிதியாண்டின் இனி வரும் காலங்களில் மீதமுள்ள தவணைகளை மத்திய அரசு வழங்கவிருப்பதால், **2017–2018** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஈ) <u>மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்</u>:**

**2017–2018** ஆம் ஆண்டிற்கான மத்திய அரசு நிதி அளிக்கும் திட்டங்கள் உட்பட, மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் **20,231** கோடி ரூபாய் என

கணிக்கப்பட்டதைக் காட்டிலும், **2017** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை **8,612** கோடி ரூபாய் மட்டுமே வரப்பெற்றது. இது, **2017–2018** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்ட உதவி மானியத்தில் **42.57** சதவீதமாகும். முந்தைய ஆண்டு இதே காலகட்டத்தில் மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற உதவி மானியம் **10,108** கோடி ரூபாயாகும். மத்திய அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதியுதவியை, மாநில அரசின் மூலமாக வழங்கப்பட்டு வந்த நடைமுறையை மாற்றி, செயல்படுத்தும் முகமைக்கு தற்போது நேரடியாக வழங்கியதே உதவி மானியத்தின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாகும்.

மத்திய அரசு நிதி அளிக்கும் திட்டங்கள் முறைப்படுத்தப்பட்டு, அத்திட்டங்களில் மத்திய அரசின் பங்கு குறைக்கப்பட்டதால், இத்திட்டங்களுக்கு மாநில அரசானது தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து

அதிகமான நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. உதவி மானியங்களில் மத்திய அரசிடமிருந்து முந்தைய ஆண்டுவரை விடுவிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் நடப்பு நிதியாண்டிற்கான வரவுகளைப் பெறுவதற்கு, இந்த அரசு தொடர் முயற்சி மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின் கீழ் பெறப்பட வேண்டிய உதவித்தொகை, மெட்ரிகுலேசனுக்குப் பின் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை மற்றும் 13வது நிதிக்குழு மானியங்களின் நிலுவைகளைப் பெற சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து பெறவேண்டிய உதவி மானியங்களில் உள்ள நிலுவைகளால் தமிழ்நாட்டின் நிதிநிலை பாதிக்கப்படும் காரணத்தால், குறித்த நேரத்தில் மானியங்களை மத்திய அரசிடமிருந்து பெற செயலகத் துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் வரவு

செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட அளவு எட்டப்படும்.

## செலவினங்கள் குறித்த ஆய்வு

### (அ) வருவாய்க் கணக்கு செலவினம்

2017–2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கு செலவினங்கள் 1,75,293 கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான வருவாய்க் கணக்கு செலவினம் 76,924 கோடி ரூபாயாகும். இது, வருவாய்க் கணக்கு செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 43.88 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட வருவாய்க் கணக்கு செலவினம் 78,573 கோடி ரூபாய். 2017–2018 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினம் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில்

மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 2.10 சதவீதம் குறைந்துள்ளது. மத்திய அரசு, 2016–2017 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதியுதவியை மாநில அரசின் மூலமாக வழங்கிய நிலையில், அதற்கு மாறாக, 2017–2018 ஆம் ஆண்டு நேரடியாக செயல்படுத்தும் முகமைக்கே வழங்கப்பட்டதால், வருவாய்ச் செலவினம் குறைந்ததற்கான முக்கியக் காரணமாகும்.

மாநில அரசு ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை அக்டோபர் 1, 2017 முதல் அமல்படுத்தியதால் அரசுக்கு 6,480 கோடி ரூபாய் கூடுதல் நிதிச்சுமை இந்த நிதியாண்டில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினப் போக்கின் சுருக்கம் பின்வருமாறு:

| வருவாய்ச் செலவினங்கள் | 2016–2017 முதல் நிலைக் கணக்குகள் | 2017–2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2016 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2017 வரையிலான செலவினம் | 2016–2017 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2017–2018 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2017–2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| சம்பளங்கள் (கல்விக்கான அரசின் மானிய உதவி உட்பட) | 40,124 | 46,332 | 21,631 | 22,112 | 2.22 | 47.73 |
| ஓய்வூதியங்களும், ஓய்வுகாலப் பலன்களும் | 18,432 | 20,577 | 10,127 | 11,124 | 9.84 | 54.06 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும், பராமரிப்புகளும் | 8,748 | 9,764 | 3,309 | 2,919 | - 11.79 | 29.90 |
| உதவித் தொகைகளும், நிதி மாற்றங்களும் | 64,364 | 72,616 | 35,077 | 30,525 | -12.98 | 42.04 |
| வட்டி செலுத்துதல் | 21,449 | 25,982 | 8,428 | 10,232 | 21.40 | 39.38 |
| ஏனையவை | 78 | 22 | 1 | 12 | - | 54.55 |
| **மொத்தம்** | **1,53,195** | **1,75,293** | **78,573** | **76,924** | **- 2.10** | **43.88** |

## (ஆ) மூலதனச் செலவினம்

2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், மூலதனச் செலவினத்திற்காக 27,789 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 5,311 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது மூலதனச் செலவினத்திற்கான 2017–2018 ஆம் ஆண்டு மொத்த ஒதுக்கீட்டில் 19.11 சதவீதமாக இருந்த போதிலும், கடந்த ஆண்டைக் காட்டிலும் 12.19 சதவீதம் வளர்ச்சியையும் காட்டுகிறது. மூலதனச் செலவுகளுக்கான பணிகளை மேற்கொள்ள அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வரும் மாதங்களில், மூலதனப் பணிகளைச் செயலாக்க ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## <u>ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்</u>

**2003** ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் **2017** ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மாநில அரசு திருத்தங்கள் மேற்கொண்டது. திருத்தப்பட்ட சட்டப்படி, மாநில அரசு **2019–2020** ஆம் ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையையும், **2017–2018** ஆம் ஆண்டிற்கும் நிதிப் பற்றாக்குறையையும் அறவே நீக்க வேண்டும். நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **3** சதவீதத்திற்கு மிகாதவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது. உதய் திட்டத்தின் கீழ், தமிழக அரசு **22,815** கோடி ரூபாய் அளவிலான தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் கடன்சுமையை ஏற்றுக்கொண்டதன் விளைவாக **2016–2017** ஆம் ஆண்டின் முதல் நிலைக் கணக்குகளின்படி, நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் **4.20** சதவீதமாக இருந்தது. **2003** ஆம் ஆண்டு

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய பிறகு, ஆண்டு வாரியான நிதிநிலைக் குறியீடுகளின் நிலவரம் பின்னிணைப்பு **–1–** இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான நிதிநிலைக் குறியீடுகள் பின்வருமாறு:

## நடப்பு ஆண்டில் நிதிநிலைக் குறியீடுகள்

| நிதிநிலைக் குறியீடுகள் | 2017-18 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | 2017, செப்டம்பர் மாதம் வரை |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| மொத்த வருவாய் வரவுகள் | 1,59,363 | 67,204 |
| வருவாய்க் கணக்கு செலவினம் | 1,75,293 | 76,924 |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) | (-) 15,930 | (-) 9,720 |
| மொத்த மூலதனச் செலவினம் (நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) | 26,046 | 7,289 |
| மொத்தச் செலவினம் | 2,01,339 | 84,213 |
| நிதிப் பற்றாக்குறை | 41,977 | 17,009 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பீடு | 15,03,970 | ---- |
| | (%) | |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (இலக்கு) | ---- | ---- |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (உள்ளபடி) | (-) 10.00 | (-) 14.46 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (இலக்கு) | < 3.00 | < 3.00 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (உள்ளபடி) | 2.79 | 1.13 |

**<u>நிதிநிலைக் குறியீடுகள் குறித்த ஆய்வு</u>**

முந்தைய பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, சில இனங்களைத் தவிர பொதுவாக 2017–2018 ஆம் ஆண்டிற்கான முதல் ஆறு மாத வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் பொதுவாக மொத்த மதிப்பீடுகளை ஒட்டியே இருக்கும் என கருதப்படுகிறது. ஏழாவது ஊதியக்குழு தனது பரிந்துரைகளை 2017, செப்டம்பர் மாதம் அளித்த காரணத்தினால் திருத்திய ஊதிய விகிதங்களினால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச்சுமையை மார்ச் 2017 இல் வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யும்போது மதிப்பீடு செய்ய இயலவில்லை.

மதுபான விற்பனையில் ஏற்பட்ட சரிவால் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் அயல்நாட்டு மதுபானத்தின் மீதான மாநில ஆயத்தீர்வை மற்றும் மதுபான உற்பத்தியாளர்களுக்கான அடிப்படை விலையை அதிகரித்தது போன்ற முயற்சிகளோடு,

நிலுவை இனங்களை வசூலிக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முந்தைய ஆண்டைக் காட்டிலும் முத்திரைத் தீர்வை மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் மூலம் பெறப்பட்ட வரி வருவாயில் ஏற்பட்ட கணிசமான இழப்பின் காரணமாக, மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி இழப்பை சரிகட்ட அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளின் பத்திரப் பதிவு தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், முடக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மீதான முத்திரைக் கட்டண நிலுவையை வசூலிக்கவும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாநில அரசு 2017 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தியதால், தற்போதுள்ள பணியாளர்களின் திருத்திய ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களின் திருத்திய ஓய்வூதியம் போன்றவற்றினால் இந்த ஆண்டில் மாநில அரசின்

நிதிநிலையில் **6,480** கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, வருவாய்ப் பற்றாக்குறை, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட 15,930 கோடி ரூபாய் அளவைக் காட்டிலும், மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. வருவாய்ப் பற்றாக்குறையை நிலைப்படுத்த, வருவாய்ச் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும், வருவாய் வரவுகளை அதிகரிக்கவும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாநிலம் கடுமையான நிதிநிலையில் உள்ளபோதிலும், மாநில அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளை செவ்வனே செயல்படுத்தி வருகிறது. எனினும், கடுமையான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டும், தவிர்க்கக்கூடிய செலவுகளைக் கட்டுப்படுத்தியும், வருவாய் வரவுகளை அதிகரிப்பதன் மூலமும் வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, வருவாய்ப் பற்றாக்குறை மேலும் உயரும் என்ற காரணத்தால், அதை விடுத்து ஏனைய மதிப்பீடுகள் பெரும்பாலும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட அளவை ஒட்டியே இருக்கும். எனினும், நிதிப் பற்றாக்குறைக்கான இலக்கு மற்றும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் அளவு ஆகியவை கணிக்கப்பட்ட அளவிலேயே இருக்கும்.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் (திருத்தப்பட்டது) கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை நிருவகிக்கும் பொருட்டு, நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டம் ஒன்றை நிதிநிலை அறிக்கையுடன் அரசு தாக்கல் செய்து வருகிறது.

2017–2018 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த இந்த ஆய்வு, மாநிலத்தின் உண்மையான

நிதிநிலையை எடுத்துரைப்பதுடன், நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டத்தில் வரவினம்–செலவினம் இடையேயான இடைவெளி ஏதேனும் இருப்பின் அவற்றைச் சமன் செய்ய மாநில அரசு திறன்மிகு முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதையும் காட்டுகிறது.

**ஓ.பன்னீர்செல்வம்**
**துணை முதலமைச்சர்**

*********

## பின்னிணைப்பு–1

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| 2003–2004 கணக்குகள் | - 20.28 | -1565.24 | - 6.60 | 4.01 | 5591.16 | 3.19 |
| 2004–2005 கணக்குகள் | - 17.28 | -703.34 | - 2.47 | 3.76 | 5569.76 | 2.75 |
| 2005–2006 கணக்குகள் | - 14.28 | 1951.33 | 5.75 | 3.51 | 2250.61 | 0.96 |
| 2006–2007 கணக்குகள் | - 11.28 | 2648.26 | 6.47 | 3.26 | 3956.00 | 1.43 |
| 2007–2008 கணக்குகள் | - 8.28 | 4545.49 | 9.57 | 3.01 | 3685.59 | 1.21 |
| 2008–2009 கணக்குகள் | < - 5.00 | 1452.25 | 2.64 | < 3.00 | 8547.76 | 2.52 |
| 2009–2010 கணக்குகள் | ** | - 3531.22 | - 6.32 | < 4.00 | 11807.26 | 2.54 |
| 2010–2011 கணக்குகள் | < - 5.00 | - 2728.69 | - 3.89 | < 4.00 | 16646.62 | 3.21 |
| 2011–2012 கணக்குகள் | 0 / உபரி நிலை | 1364.10 | 1.60 | < 3.00 | 17274.08 | 2.97 |

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| **2012–2013** கணக்குகள் | 0 / உபரி நிலை | 1760.27 | 1.78 | < 3.00 | 16518.99 | 2.39 |
| **2013–2014** கணக்குகள் | < - 5.00 | - 1788.24 | - 1.66 | < 3.00 | 20583.49 | 2.55 |
| **2014–2015** கணக்குகள் | ** | - 6407.56 | - 5.23 | < 3.00 | 27162.44 | 2.49 |
| **2015–2016** கணக்குகள் | ** | -11985.35 | - 9.29 | < 3.00 | 32627.56 | 2.69 |
| **2016–2017** முதல் நிலைக் கணக்குகள் | ** | -12973.00 | - 8.86 | < 3.00 | 56171.35 | 4.20 |
| **2017–2018** வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | ** | -15930.35 | - 10.00 | < 3.00 | 41976.78 | 2.79 |

** இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.